17 AUG 2016
மருங்காபுரி

ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்,

முன்னிலை:திரு.அ.கோ.ராஜராஜன்.,B.E.,

ந.க.அ5-1911-2016 நாள்: 04.08.2016

பொருள்: கிராம நிர்வாகம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மருங்காபுரி வட்டம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் மருங்காபுரி வட்டத்திற்கு கிராம நிர்வாக அலுவலராக தேர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை: 1.திருச்சராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க. சி 2-29647-2014 நாள்:20.04.2015
2..ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர்(பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ5-1959-2015 நாள்:23.04.2015
3..ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர்(பொ) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ5-3558-2015 நாள்:01.12.2015
4.மருங்காபுரி வருவாய் வட்டாட்சியரின் கடித எண்.ந.க.அ3-02/2016 நாள்:27.07.2016

ஞஞஞஞஞ

ஆணை:

பார்வை1-ல் காணும் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் முலம் தேர்ந்துதெடுக்கப்பட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் கோட்டத்திற்கு. ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் செயல்முறைகளின்படி மருங்காபுரி வட்டத்திற்கு கிராம நிர்வாக அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.அவ்வாறு பணிநியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்திட கருத்துருக்கள் பார்வை 4-ல் காணும் மருங்காபுரி வட்டாட்ச்சியர் கடிதத்தில் அறிக்கையினை சமர்பித்துள்ளார்.

மருங்காபுரி வருவாய் வட்டாட்சியரின் அறிக்கையில் கீழ்க்கண்டுள்ள கிராம நிர்வாக அலுவலர்களின் பெயரில் எவ்விதகுற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லை எனவும்,அரசுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத்தொகை ஏதுமில்லை எனவும் பணியில் சேர்ந்த நாள்முதல் எவ்வித விடுப்பு விண்ணப்பமில்லாமல் தொடர்ந்து பணிபுரிந்து உள்ளனர் எனவும் கிராம நிர்வாக அலுவலர்கள் பணியில் சேர்ந்த நாள்முதல் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணி வரன்முறை செய்திடவும் பரிந்துரை செய்துள்ளார்.

Scanned by CamScanner

| வ.எண் | கிராம நிர்வாக அலுவலர் பெயர்(திருவாளர்கள்) | பணிபுரியும் கிராமம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்ய வேண்டிய நாள் |
|---|---|---|---|---|
| 1 | கே.ராஜு | பிராம்பட்டி(தெற்கு) | 28.04.2015 முற்பகல் | 28.04.2015 முற்பகல் |
| 2. | ப.கோட்டைராஜா | ஊத்துக்குளி | 30.04.2015 முற்பகல் | 30.04.2015 முற்பகல் |
| 3. | மு.பாண்டியராஜன் | பளுவஞ்சி(மேற்கு) | 30.04.2015 முற்பகல் | 30.04.2015 முற்பகல். |
| 4. | ஆ.சிவராஜ் | எண்டபுளி | 04.05.2015 முற்பகல் | 04.05.2015 முற்பகல் |
| 5. | ஆ.வெங்கடேஷ் | வேலக்குறிச்சி | 04.05.2015 முற்பகல் | 04.05.2015 முற்பகல் |
| 6. | எஸ்.முத்துராஜ் | பிராம்பட்டி (வடக்கு) | 22.05.2015 முற்பகல் | 22.05.2015 முற்பகல் |
| 7. | எம்.பால்பாண்டி | கலிங்கப்பட்டி(மேற்கு) | 01.06.2015 முற்பகல் | 01.06.2015 முற்பகல் |

எனவே.மருங்காபுரி வருவாய் வட்டாட்சியரின் அறிக்கையினை ஏற்று மேற்கண்ட மருங்காபுரி வட்டத்தில் பணிபுரிந்துவரும் ஏழு கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாள் முதல் கிராம நிர்வாக அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

வருவாய் கோட்டாட்சியர்,
ஸ்ரீரங்கம்.

4/8/16

பெறுநர்:
சம்பந்தப்பட்ட நபர்கள். (மருங்காபுரி வட்டாட்சியர் மூலமாக)

| | |
|---|---|
| நகல்:<br>வருவாய் வட்டாட்சியர்,<br>மருங்காபுரி | இந்த உத்திரவினை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார். |

நகல்:
மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்:
மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner